**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 327/2025**

**Prosecution witness : அ.சா. 4** **Date : 30.01.2026.**

| **Name : துளசிமணி** | **Taluk :** |
|---|---|
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

1) நான் தற்போது ஜலகண்டாபுரம் காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 31.10.2022-ம் தேதி ஜலகண்டாபுரம் காவல்நிலையத்தில் நான் நிலையப் பொறுப்பில் இருந்த போது, மேட்டூர் அரசு மருத்துவமனையில் இருந்தது கிடைக்கப் பெற்ற காயத்தகவலின் பேரில் மேற்படி மருத்துவமனைக்கு சென்று அங்கு உள்நோயாளியாக இருந்த தனசேகரன், த/பெ.கிருஷ்ணன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, பின்னர் விசாரணை செய்த போது நிலைய சமுதாய பதிவேட்டில் மனு ரசீது எண்.500/2022 என்ற எண்ணில் வழங்கப்பட்டு பின்னர் விசாரணை அடிப்படையில் புகார் வாக்குமூலத்தின் தன்மைக்கேற்ப **நி.கு.எண்.576/2022 u/Sec. 294(பி), 324, 506(2) IPC** ஆக வழக்கு பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.2** ஆகும்.

2. பிறகு நான் புலன் விசாரணை நகலை எடுத்துக்கொண்டு கடந்த 03.11.2022 ம் தேதி மதியம் 12.30 மணிக்கு சம்பவ இடம் பொட்டனேரி பெரியாண்டிச்சி அம்மன் கோவில் அருகே வாதி வீட்டு காம்போன்டு அருகே சென்று சாட்சிகள் போது மற்றும் பெருமாள் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தேன். பார்வை மகஜர் மற்றும் வரைபடம் **அ.சா.ஆ.3** மற்றும் **அ.சா.ஆ.4** ஆகும்.

3. பின்பு சாட்சிகள் தனசேகரன், கோமதி, நேசமணி, ரங்கநாதன், குழந்தைவேல், போது, பெருமாள், ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கில் காயமடைந்த தனசேகரன் மற்றும் கோமதி என்பவர்களுக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் சுரேந்தர் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, விபத்து பதிவேடுகள் பெற்றேன். தனசேகரன் மற்றும் கோமதி என்பவர்களுடைய விபத்து பதிவேடுகள் முறையே **அ.சா.ஆ.5 மற்றும் அ.சா.ஆ.6** ஆகும்.

4. இவ்வழக்கின் எதிரி ராஜேஷ் கடந்த 10.11.2022 ம் தேதி மாண்புமிகு மாவட்ட நீதிமன்றதில் முன்ஜாமீன் பெற்றதால் கைது செய்ய மார்கமில்லை. பின்னர் மேல் விசாரணைக்காக காவல் உதவி ஆய்வாளர் வசம் ஒப்படைத்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.**

5. 31.10.2022 ம் தேதி மேட்டூர் அரசு மருத்துவமனைக்கு 2 மணியளவில் சென்று புகார் வாக்குமூலம் பதிவு செய்தேன். சம்பவம் எந்த தேதியில் நடந்தது என்றால் 30.10.2022 ம் தேதி மாலை 3 மணியளவில் நடந்தது. அந்த தேதியில் தான் வாக்குமூலம் பெற்றேனா என்றால் இல்லை. முதல் தகவல் அறிக்கையில் 2 ம் பக்கத்தில் கடந்த 03.11.2022 ம் தேதி காலை 10 மணிக்கு மேச்சேரி காவல் உதவி ஆய்வாளராக இருந்த போது தகவல் கிடைத்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 31.10.2022 ம் தேதி வாக்குமூலம் பெற்று 03.11.2022 ம் தேதி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன் என்றால் சரிதான்.

6) 2 நாட்கள் காலதாமதமாக முதல் தகவல் அறிக்கை பதியப்பட்டதற்கு என்ன காரணம் என்றால் சி.எஸ்.ஆர் போட்டதால் காலதாமதம் ஏற்படாது. சி.எஸ்.ஆர் நகலை நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளேனா என்றால் இல்லை. என் வழக்கு கோப்பில் உள்ளது. 2 நாட்கள் காலதாமதத்திற்கு காரணம் விசாரணையில் சம்பவம் உண்மையென தெரிந்ததால் 2 நாட்கள் காலதாமதம் ஆனது.

7) சம்பவயிடத்திற்கு என்று சென்றேன் என்றால் 03.11.2022 ம் தேதி தான் சம்பவயிடம் சென்றேன். இடைப்பட்ட நாளில் சம்பவயிடம் செல்லவில்லை என்றால் ஆமாம். 03.11.2022 ம் தேதி எத்தனை மணிக்கு சென்றேன் என்றால்

மதியம் 12.30 மணிக்கு சென்றேன். நான் செல்லும் போது யார் யாரை விசாரித்தேன் என்றால் தனசேகரன், கோமதி, நேசமணி, ரங்கநாதன், போது மற்றும் பெருமாள் ஆகியோர்கள் இருந்தார்கள். சம்பவயிடத்தில் வேறு யாரும் இல்லை என்றால் ஆமாம். அனைவரிடமும் அங்கேயே விசாரித்து வாக்குமூலம் பெற்றேனா என்றால் ஆமாம்.

8) நான் சம்பவயிடம் சென்று சாட்சிகளை விசாரிக்கவில்லை என்றும் புகார்தாரருக்கும் எதிரிக்கும் இடையே நிலம் சம்மந்தமாக பிரச்சனை இருந்தது என்றும் அதன் காரணமாக பொய்யாக புகார் கொடுக்கப்பட்டது என்றும் நான் சரியாக விசாரிக்காமல் பொய்யாக குற்றச்சாட்டு வனைந்துள்ளேன் என்றால் சரியல்ல. பொய்யான புகாரை பெற்று தவறுதலாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

ஓம்/- தே.மயில்சாமி

குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2
மேட்டூர்.